செ.வெ.எண்:27/2017 நாள்:11.09.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு <u>கோ-ஆப்டெக்ஸ் 30% சிறப்பு தள்ளுபடி விற்பனையை துவக்கி வைத்தார்.</u>**



சிவகங்கை கோ.ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா.இ.ஆ.ப.,அவர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோ-ஆப்டெக்ஸ் சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையை துவக்கி வைத்தார். உடன் கோ.ஆப்டெக்ஸ் அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோ-ஆப்டெக்ஸ் 30% சிறப்புத் தள்ளுபடி விற்பனையை துவக்கி வைத்தார்.

கோ-ஆப்டெக்ஸ் என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1935-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு தொடர்ந்து 82 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சிறப்பான முறையில் சேவை புரிந்து வருகிறது. இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும், வாடிக்கையாளர்களின் பேராதரவும் தான் முக்கியம்.

கைத்தறி ரகங்களின் விற்பனையை அதிகரிக்க தமிழக அரசு ஆண்டு தோறும் பண்டிகை காலங்களில் 30% சிறப்பு தள்ளுபடி வழங்கி வருகிறது. எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டு, பருத்தி கைத்தறி ரகங்களுக்கு 30% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. பண்டிகையை முன்னிட்டு பல வண்ணங்களில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பலவித வடிவமைப்புகளில் பருத்தி, பட்டு சேலைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் மற்றும் நவீன காலத்திற்கு உகந்தமான இரகங்கள் தீபாவளி பண்டிகைக்காக தருவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, உடல்நலத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்ப இரசாயன உரங்கள் இல்லாமல், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பருத்தியைக் கொண்டு இயற்கை சாயமிட்ட ஆர்கானிக் புடவை இரகங்கள் விற்பனைக்கு உள்ளது. மேலும், பாரம்பரிய ரகங்களை புதுப்பிக்கும் விதமாக கண்டாங்கிச் சேலைகள், செட்டிநாடு சேலைகள், கைத்தறி சுங்கிடி சேலைகள், பண்டிகைக்காக தருவிக்கப்பட்டுள்ளன. மேலும் நவீன யுக ஆடவர்களை கவரும் விதமாக லினன் சட்டைகள், லினன்/பருத்தி (Linen/Cotton) சட்டைகள் கண்ணைக் கவரும் வண்ணங்களில் வாடிக்கையாளர்களுக்காக தருவிக்கப்பட்டுள்ளது.

2017-2018-ஆம் ஆண்டிற்குரிய தங்க மழைத் திட்டம் 15.09.2017 முதல் 31.01.2018 வரை நடைமுறைபடுத்தப்பட உள்ளது. வாடிக்கையாளர்கள் வாங்கும் ஒவ்வொரு ரூ.2,000/- மதிப்புள்ள துணி இரகங்களுக்கு ஒரு கூப்பன் வழங்கப்பட்டு அந்த கூப்பனில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, மிகச் சிறந்த முறையில் பதிலளிக்கும் வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தங்க காசுகள் பரிசாக வழங்கப்படவுள்ளது.

எங்களின் இரகங்களை மின் வணிக வலைதளமான www.cooptex.com என்ற இணைய தளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் 2017-ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் சிறப்பு விற்பனையினை காந்தி வீதியில் அமைந்துள்ள சிவகங்கை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா, இ.ஆ.ப.,அவர்கள் முதல் விற்பனையை துவக்கி வைத்தார்கள்.

சிவகங்கை விற்பனை நிலையத்தின் கடந்த ஆண்டு தீபாவளி விற்பனை ரூ.79.89 இலட்சங்கள், நடப்பு ஆண்டு தீபாவளி விற்பனை குறியீடாக ரூ.100.00 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் மதுரை மண்டல மேலாளர் திரு.நாகராஜன், முதுநிலை மேலாளர் (தணிக்கை) திரு.சண்முகசுந்தரம், மேலாளர் (அரசுத்திட்டம்) திரு.பழனிச்சாமி, மேலாளர் (ஒய்வு) திரு.மணிவண்ணன், சிவகங்கை வட்டாட்சியர் திரு.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர். திருமதி.முல்லைகொடி, மேலாளர் (பொறுப்பு) மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் அனைவரும் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்புடன் செய்திருந்தனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.